# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 313/2015**

பெயர் : **பச்சமுத்து** நாள் : 07.03.2023

பி.வா.சா.1 – வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – பச்சமுத்து - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.05</u>

நான் எர்ணாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2 ஆண்டுகளாக எர்ணாபுரம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் எர்ணாபுரம் கிராம நிர்வாக அலுவலர் ஒரு தரப்பினர் இல்லையென்றால், சரிதான். சங்ககிரி வட்டாட்சியர் கேட்டுக்கொண்டதின் பேரில் நான் சாட்சியம் அளித்துள்ளேன். பிரதிவாதிகள் தரப்பு எதிர் வாதம் என்னவென்றும் அந்த எதிர் வாதத்தை யார் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரியாது. வாதி வழக்கு சொத்து அவருக்கு சொந்தமானது என்று கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி பிரதிவாதிகளுக்கிடையே உள்ள உண்மையான பிரச்சனை குறித்து சாட்சியம் குறித்து கூறுகிறேனா அல்லது ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் கூறுகிறேனா என்றால், ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சியம் கூறுகிறேன்.

2) நீதிமன்ற ஆணையர் பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையின் விபரமும் எனக்கு தெரியாது. வாதிகள் உரிமை கோரும் இடமானது சர்வே எண் 260/2 ல் உள்ளது. சர்வே எண் 260/2 ல் உள்ள நிலத்தின் வகைபாடு கிராம நத்தமாகும். பொதுவாக கிராம நத்த இடம் யாரிடம் அனுபவத்தில் உள்ளதோ அவருக்கே அந்த இடம் சொந்தமானது என்று சொன்னால், சரிதான். பிரச்சனைக்குண்டான நிலம் ஆரம்பத்தில் ஒரு ஆறுமுக ஆசாரிக்கு சொந்தமானது என்ற விபரம் எனக்கு தெரியாது. அவர் சுப்ரமணிய பிள்ளை என்பவரிடம் பெற்ற கடனை செலுத்தாததால் சுப்ரமணிய பிள்ளை சேலத்தில் இயங்கி வந்த மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி அசல் வழக்கு 172/1931 ன்படி தாக்கல் செய்து அதன் பின்னிட்டு நிறைவேற்று மனு எண்

1819/1931 ன் உத்தரவுபடி ஏலம் விடப்பட்டது, அதில் வைத்திசெட்டியார் என்பவர் தாவா சொத்தை ஏலம் எடுத்துள்ள விபரம் எனக்கு தெரியாது.

3) வைத்திசெட்டி என்பவர் வாதியின் குடும்பத்தை சார்ந்தவர் என்ற விபரம் எனக்கு தெரியாது. வைத்திசெட்டி குடும்பத்தினருக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் வா.சா.ஆ.2 படி பி பாகப்படி வாதிகளுக்கு தாவா சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. 04.03.1949 தேதியிலிருந்து வாதிகள்தான் வழக்கு சொத்தை அனுபவத்து வருகிறார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. பிரச்சனைக்குரிய இடத்தை ஒட்டி கிழபுறத்தில் வாதிகளுக்கு சொந்தமான இடம் மற்றும் மெத்தை வீடு உள்ளது என்று சொன்னால், வீடு உள்ளது, ஆனால் பட்டா வழங்கவில்லை. வீட்டிற்கு மேற்குபுறத்தில் உரையிட்ட கிணறு ஒன்று உள்ளது என்று சொன்னால், நான் அதை பார்க்கவில்லை. அந்த கிணற்றை ஒட்டி மகுடஞ்சாவடி ரயில் நிலையம் உள்ளது என்றால், சரிதான். ரயில் நிலையத்திற்கு வரும் பயணிகளின் வசதிக்காக கிணறு அமைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால், அதைப்பற்றி எனக்கு தெரியாது.

4) வழக்கு சொத்திற்கு தென்புறம் தார் சாலை ஒன்று உள்ளது என்றால், சரிதான். வருவாய் ஆவணப்படி மேற்படி சொத்துக்களுக்கிடையே பஞ்சாயத்து அலுவலகத்திற்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு இடம் ஏதேனும் உள்ளதா என்றால். இல்லை. தற்போதுள்ள பஞ்சாயத்து அலுவலகம் கடந்த 2015 ம் ஆண்டில் கட்டப்பட்டது என்றால், சரிதான். அந்த அலுவலகத்தை கட்டும்போது வாதிகள் ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. ஆட்சேபனைகளிலிருந்தும் அதனை நிராகரித்து 2,3 பிரதிவாதிகள் அலுவலகங்களை கட்டினார்கள் என்று சொன்னால், சரியல்ல. வாதிகள் ஆட்சேபனைகளுக்கு பின்னிட்டு அவ்வாறு அலுவலகங்கள் கட்ட 2, 3 பிரதிவாதிகளுக்கு அதிகாரம் இல்லையென்று சொன்னால், சரியல்ல. இ சேவை மையம் என்பது தற்போது ஆரம்பிக்கப்பட்டது என்றால், சரிதான். இ சேவை மையத்திற்கு வடபுறமாகவும் மேற்குபுறமாகவும் காலி இடங்கள் உள்ளது என்றால், சரிதான். வாதிகள் அந்த காலியிடங்கள் வழியாகத்தான் கிழக்குபுறமாக உள்ள வீட்டிற்கு சென்று வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல.

5) நடைமுறை விதிகளை எதுவும் பின்பற்றாமல், அலுவலகங்கள் கட்டியுள்ளதால், வாதிகள் கோரியுள்ள செயலுறுத்து கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்றாலும், அலுவலக கட்டிடங்கள் அகற்றக்படக்கூடியவை அல்ல என்று சொன்னாலும், சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் அளிப்பதற்கு 2, 3 பிரதிவாதிகளே தகுதியானவர்கள் என்றாலும், அவர்கள் வந்து சாட்சியம் அளித்தால், அது வழக்கிற்கு பாதகமாக சென்றுவிடும் என்பதால்தான் என்னை சாட்சியமாக முன்னிலைப்படுத்தியுள்ளார்கள் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து அரசுக்கு சொந்தமானது என்பதற்கு அடங்கல் மற்றும் அ பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அடங்கல் மற்றும் அ பதிவேடு சமீப காலத்திற்கானதுதான் என்றாலும், முன் காலத்திற்கானது அல்ல என்று சொன்னால், சரியல்ல. கடந்த 1949 ம் ஆண்டிலிருந்து வழக்கு சொத்து அரசின் அனுபவத்தில்தான் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் 1980 காலகட்டத்திற்கானது ஆகும்.

6) பி.வா.சா.ஆ.1, 2 ஆவணங்களில் வழக்கு சொத்துக்கள் அரசாங்கத்தின் அனுபவத்தில்தான் உள்ளது என்பதற்கான குறிப்புகள் எதுவும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வழக்கு சொத்து பஞ்சாயத்தின் அனுபவத்தில் உள்ளது என்ற குறிப்பு இல்லையென்று சொன்னால், தனியாக பஞ்சாயத்து அலுவலகம் என்று வகைபாடு எதுவும் செய்யவில்லை. பி.வா.சா.ஆ.2 ஆவணப்படி சர்வே எண் 260/2 ன் மொத்த விஸ்தீரணம் 0.52.5 ஹெக்டேர் என்று உள்ளது என்றால், சரிதான். வழக்கு சொத்தில் உள்ள பஞ்சாயத்து அலுவலகம் கட்டியுள்ள இடம் தாவா சொத்தில்தான் காலம் காலமாக உள்ளது என்பதை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லையென்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து கடந்த 1949 ம் ஆண்டிலிருந்து வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதாலும், அதற்கு அனுசரணையாக வாதிகள் ஆவணங்களை தாக்கல் செய்துள்ள நிலையிலும், வாதிகளின் கோரியுள்ளபடி வழக்கு தீர்ப்பாக வேண்டியது என்று சொன்னால், சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

வழக்கு சொத்துள்ள இடம் ரயில்வே துறைக்கு ஒதுக்கப்பட்ட இடமாகும்.

<u>குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்து ரயில்வே துறைக்கு ஒதுக்கப்பட்டது என்பதற்கான எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால், சரிதான். பஞ்சாயத்து அலுவலகம் கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்தோ அல்லது ரயில்வே துறையினரிடமிருந்தோ எந்த அனுமதியும் வாங்கவில்லை.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.40</u>

ஒப்பம்/பச்சமுத்து

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.